# குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் சாதாரணக்கூட்டம் ஆகஸ்ட் திங்கள் 16–ம் நாள் வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெறும். தாங்கள் தவறாது கலந்து கொள்ளுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

தலைவர்
குளச்சல் நகராட்சி மன்றம்

**பொருள் எண் : 1**

குளச்சல் நகராட்சிக்கு பகுதி –II திட்டத்தின்கீழ் குளச்சல் பிரதான சாலையில் சுந்தர் பிறஸ் அருகில் இருந்து பேருந்து நிலைய மேல்நிலை நீர்தேக்க தொட்டி வரையில் பம்பிங் மெயின் அமைக்கும் பணிக்கு நகர்மன்ற தீர்மானம் எண். 258 நாள் 23.07.2007–ல் ரூ. 1.00 இலட்சத்திற்கு ஒப்புதலளித்துள்ளது. அதனடிப்படையில் 08.08.2007–ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டன. இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. அதன் விபரம் பின்வருமாறு.

1) திரு. தங்கமணி : 3.94% மதிப்பீட்டை விட அதிகம் (ரூ. 89,765/–)

2) திரு.சி.சந்திரசேகர் : 0.02% மதிப்பீட்டை விடகுறைவு (ரூ. 86,349.50)

இதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.சி.சந்திரசேகர் என்பவர் 0.02% மதிப்பீட்டை விடகுறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். இது மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு** : குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.சி.சந்திரசேகர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண். 295 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 2**

குளச்சல் நகராட்சிக்கு சொந்தமான ஜீப் எண்.TN-74.V.3530 –ன் ஒட்டுநர் மேற்படி ஜீப்பில் வீல் அலெயின்மென்ட், வீல் பேலன்சிங், எஞ்சின் ஆயில் மாற்றுதல், டீசல் பில்டர், ஆயில் பில்டர் மாற்றுதல் மற்றும் கிளட்ச் பக்கெட் மாற்றுதல் ஆகிய பணிகளை மேற்கொள்ள வேண்டும் என தெரிவித்துள்ளார். எனவே மேற்படி பணியினை பொது நிதியிலிருந்து செலவு செய்வதற்கும், அதற்கான உத்தேச செலவு ரூ. 5000/–க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மானம் எண். 296 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் : 3</u>**

குளச்சல் நகராட்சி எல்கைகுட்பட்ட 16–வது வார்டில் காந்தி ஜங்சனிலிருந்து கடற்கரை செல்லும் சாலையின் அருகில் வைத்தியவிளாகம் பகுதியில் கதவு எண். 16/315–1 வீட்டின் அருகில் பொதுக்குழாய் அமைக்க 16–வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் கோரிக்கையின் பேரில் நகர்மன்றத் தீர்மானம் எண். 42 நாள் 06.12.2006 மூலம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. தற்போது ஆண்டிப்பிள்ளைத் தெருவில் வீட்டு எண். 5/4–ன் அருகேயுள்ள பொதுக்குழாய் பயனற்று உள்ளது. ஆகவே ஆண்டிப்பிள்ளை தெருவில் உள்ள பொதுக்குழாயினை நகர்மன்றத் தலைவர் அவர்கள் அறிவுறுத்தலின்பேரில் வார்டு எண்.16–ல் உள்ள வைத்தியவிளாகம் பகுதியில் கதவு எண்.16/315–1 வீட்டின் அருகே மாற்றம் செய்வதற்கு மன்றத்தின் அ.னுமதி வேண்டப்படுகிறது

**<u>அ.குறிப்பு</u>** : மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 297 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் : 4</u>**

மரமடி மெயின் ரோட்டில் உள்ள 11 குடிநீர் இணைப்புகளுக்கு தனியாக குடிநீர் 1 மணி நேரம் வினியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது காந்தி சந்திப்பு முதல் மரமடி சந்திப்பு வரையில் சுனாமி நிவாரணப் பணி திட்டத்தின்கீழ் வடிகால் ஓடை அமைக்க ஜே.சி.பி. மூலம் தோண்டியதில் சுமார் 100 மீட்டர் நீளத்திற்கு 63 mm P.V.C. Pipe Line முழுவதும் சேதமடைந்து உள்ளது. இதனால் மேற்படி பகுதிகளுக்கு குடிநீர் வினியோகம் செய்ய இயலாத நிலையில் உள்ளது. ஆகவே மரமடி பகுதிகளுக்கு வினியோகம் செய்யும் பகிர்மானக் குழாயுடன் மேற்கண்ட 11 இணைப்புகளுக்கான பகிர்மானக் குழாயையும் இணைத்து ஒரே நேரத்தில் குடிநீர் வினியோகம் செய்தால் நேரம் மீதமாகும். ஆகவே நகராட்சி மன்றத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின் பேரில் மரமடி பகுதிகளுக்கு குடிநீர் வினியோகம் செய்யப்படும் பகிர்மானக் குழாயுடன் மேற்கண்ட 11 இணைப்புகளுக்கான பகிர்மானக் குழாயை இணைப்பதற்கும், துறைமுகத்தெருவில் ஏற்படும் குடிநீர் தட்டுப்பாட்டினை போக்குவதற்கு அலுவலக வளாக மேல்நிலை நீர்தேக்கத் தொட்டியிலிருந்து குடிநீர் வினியோகம் செய்வதற்கு மரமடி அருகில் 2 எண்ணம் சப்ளை வால்வு அமைத்து 90 mm P.V.C. குழாயுடன் இணைப்பதற்கும், அவற்றிற்காகும் உத்தேசச் செலவுத் தொகை ரூ. 22,000/–க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு :</u>** அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 298 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் : 5</u>**

**<u>குளச்சல் நகராட்சி மன்றத் தலைவர் அவர்கள் கொண்டுவரும் தீர்மானம்.</u>**

2006–2007– ம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின்கீழ் குளச்சல் நகரப் பகுதிகளில் கீழ்கண்ட விபரப்படி உள்ள இடங்களில் 25 சோடியம் விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளது. அவை

1) பர்னட்டிவிளை – F1/1, F1I/29, F1I/37, F1I/48
2) நெசவாளர் தெரு – F1II/5, F1II/7, F1II/12, F1II/22
3) பள்ளிரோடு – F1I/1, F1I/13

4) மரமடி – F1/100, F1/44, F1/27
5) காமராஜர்சாலை – F1I/20, F1/33
6) கொட்டில்பாடு – F1I/42, F1I/88Ï F1I/107
7) சாஸ்தாங்கரை – F1I/126, F1I/96
8) களிமார் – F1I/1, F1/27
9) குளச்சல் பீச் – F1/2, F1I/105, F1I/16
**மொத்தம் – 25 எண்ணம்.**

மேற்படி 25 மின்கம்பங்களில் சோடியம் விளக்குகள் பொருத்தப்பட்டதால் 24 எண்ணம் குழல் விளக்குகள் கிடைக்கப் பெற்றது. அவைகளை கீழ்க்கண்ட முக்கியமான பகுதிகளில் பொருத்த மன்றம் தீர்மானிக்கலாம்.

**1)** சாஸ்தாங்கரை – F1I/14
**2)** தெற்கு கள்ளியடைப்பு – F1/29
**3)** நடுக்கள்ளியடைப்பு – F1/35
**4)** வடக்கு கள்ளியடைப்பு – F1I/26
**5)** பர்னட்டிவிளை – F1I/27
**6)** வெள்ளிப்பிள்ளையார்கோவில் ரோடு – F1I/58, F1/14
**7)** சார்பதிவாளர் அலுவலக ரோடு – F1/44
**8)** பாலத்தன்கரை – F1/3
**9)** செட்டியத்தெரு – F1I/**38**
**10)** பள்ளிரோடு – F1I/2
**11)** அந்தோணியார் காலனி – F1I/9
**12)** துறைமுகத்தெரு – F1I/58, F1I/8
**13)** மாதா காலனி – F1/57
**14)** நரிக்கல் ரோடு – F1I/67
**15)** பள்ளிவிளாகம் – F1I/55
**16)** பீச் ரோடு – F1I/102
**17)** இக்பால் தெரு – F1I/35
**18)** இலப்பவிளை – F1I/5
**19)** சிங்கன்காவு ரோடு – F1I/35
**20)** பி.கே.கிருஷ்ணன் சாலை – F1I/90
**21)** காமராஜர் சாலை – F1/5, F1/43
**மொத்தம் – 24 எண்ணம்**

**தீர்மானம் எண். 299 ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

நகராட்சி மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி

<u>குளச்சல் நகராட்சி</u>

குளச்சல் நகராட்சி மன்றத்தின் அவசரக்கூட்டம் ஆகஸ்ட் திங்கள் 16–ம் நாள் வியாழக்கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெறும். தாங்கள் தவறாது கலந்து கொள்ளுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

தலைவர்
குளச்சல் நகராட்சி மன்றம்

<u>பொருள் எண் : 1</u>

குளச்சல் நகராட்சிப் பகுதியில் புதை வடிகால் திட்டத்திற்கான ஆய்வுப் பணிகளை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மேற்கொள்ளவும், திட்டத்திற்கான விரிவான மதிப்பீடு தயாரிக்கவும் மற்றும் செயலாக்கப் பணிகளை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் செயல்படுத்திடவும், மேலும் திட்ட ஆய்வுத் தொகை ரூ. 15.98 லட்சத்தினை திட்ட உருவாக்க நிதியிலிருந்து (Project Preparation Fund) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு செலுத்துவது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களை கேட்டிடவும் மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

<u>அ.குறிப்பு :</u> மன்றம் ஒப்புதல் செய்யலாம்.

**தீர்மானம் எண். 300 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

<u>பொருள் எண் : 2</u>

சுனாமி வாழ்வியல் ஆதாரத் திட்டத்தின்கீழ் Training Equipments -க்காக வரப்பெற்ற தொகை ரூ. 2,00,000/– (நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை கடிதம் எண். 10036/06/UPA1 நாள் 07.12.2006 ஐ கணனி பிரிவிற்கு UPS ( 5 KV UPS 4 hours Packup ) மற்றும் கணனி சம்மந்தமான பொருட்கள் வாங்குவதற்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

<u>அ.குறிப்பு</u> : மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மானம் எண். 301 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

<u>பொருள் எண் : 3</u>

குளச்சல் நகராட்சிக்கு சொந்தமான 7.00 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அலுவலக வளாகத்தினுள் அமைந்துள்ளது. இதில் தற்போது குடிநீர் அபிவிருத்தி பணியாக புதிய ஆழ்குழாய் கிணறு அமைத்து தனியாக பம்பிங் மெயின் மூலம் மேற்கண்ட நீர்த்தேக்கத் தொட்டியுடன் இணைக்கும் பணி நடைபெற்று வருவதால் நீர்த்தேக்கத் தொட்டியை சுற்றி சேறும் சகதியுமாக உள்ளது. ஆகவே அதனை சுத்தப்படுத்துவதற்கும், அலுவலக வளாகத்தினுள் அமைந்துள்ளதால் பல உயர் அதிகாரிகள் பார்வையிட்டு நீர்த்தேக்கத் தொட்டியை சுத்தமாக வைத்திருக்க அறிவுறுத்தியதின் பேரிலும், அதனை வர்ணம் பூசி பராமரிக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு நகராட்சி மன்றத் தலைவர் அவர்கள் அறிவுறுத்தியதின் பேரிலும்,

மேற்படி பணியினை உடனடியாக மேற்கொள்வதற்கும், இதற்கான உத்தேச மதிப்பீடு ரூ. 45,000/–க்கும் மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.
<u>**அ.குறிப்பு :**</u> மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
**தீர்மானம் எண். 302 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

<u>பொருள் எண் : 4</u>
<u>குளச்சல் நகராட்சி மன்றத்தலைவர் அவர்கள் கொண்டுவரும் தீர்மானம் :</u>

குளச்சல் நகரம் வளர்ச்சியடைந்து வரும் ஒரு நகரப்பகுதியாகும். மீன்பிடி துறைமுகம், திடக்கழிவு மேலாண்மை திட்டம், புதைவடிகால் திட்டம் போன்ற நகர அபிவிருத்தி திட்டப்பணிகள் அரசால் விரைவில் செயல்படுத்தப்பட உள்ளது. ஆனால் நகரின் பிரதான சாலைகள் மிகக்குறுகியதாக இருப்பதாலும், தற்போது தனியார் வாகனங்களான கார், டிம்போ, ஆட்டோ போன்றவைகளை நிறுத்துவதற்கான இடம் நகரில் இல்லாததால் பேருந்து நிலையத்தை சுற்றிலும் இதன் அணுகுசாலையின் ஓரமாகவும், பிரதான சாலையிலும் வாகனங்கள் நிறுத்தப்பட்டு வருவதால் போக்குவரத்திற்கும், பொது மக்களுக்கும் இடையூறாக உள்ளது. எனவே நகர் ஊரமைப்பு இணை இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் கடிதம் ந.க எண். 1785/02/திலிம3 நாள் : 25.07.2003–ல் குறிப்பிட்டுள்ளபடி நகராட்சி பேருந்து நிலையம் அருகாமையில் அமைந்துள்ள நூலக கட்டிடம் இருக்கும் பகுதியை அப்புறப்படுத்தவும், அதன் அருகாமையில் அமைந்துள்ள மீன் சந்தையையும் அப்புறப்படுத்தியபின் இவ்விரு இடங்களையும் ஒரேப்பகுதியாக சேர்த்து தனியார் வாகனங்கள் நிறுத்துவதற்கு இடவசதி செய்து கொடுக்கும் பட்சத்திலும் நகராட்சிக்கு நிரந்தர வருமானம் கிடைப்பதோடு போக்குவரத்து நெருக்கடிக்கும் தீர்வுகாண முடியும் என்பதால் இது தொடர்பாக மன்றம் பரிசீலிக்கலாம்.
**தீர்மானம் எண். 303 ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

நகராட்சி மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி